யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வெளியீடு

சமூகத்தொண்டன்

மலர் 01 பிலவங்க சித்திரை 01 திருவள்ளுவராண்டு 1991 [இதழ் 8

மனங்கொண்டு பணிசெய்து கிடப்பதே

நலம் தருக!

அன்னை துச்சா தனனுலே
அல்லற் படுத லாற்றாது
மன்னும் அவனின் மக்களெலாம்
மறுகிற் கிடந்தே மனம்மறுக
கண்ணீர் மழையும் தடும்துயரம்
கவலை இவைகள் கொண்டுவரும்
நன்னிலம் கொடிய புத்தாண்டே!
நன்மை செய்தே நலம்தருக.

மதுரத் தமிழர் கிழக்குவட
மாகா ணத்தில் தவமிருந்தும்
உதிரம் வெயர்வை சிந்துதுயர்
உழந்து வாடி உயிர்சோர்ந்தும்
அதிரும் அறப்போர் புரிந்தெங்கள்
அமுதத் தமிழைக் காக்கின்றார்
புதிராம் நிலையில் வருகின்ற
புத்தாண் டே!நீ நலந்தருக.

சத்தியாக்கிரகத் துணுக்குகள்

"சத்தியாக்கிரகம் நாட்டில் பல நன்மைகளைச் செய்திருக்கின்றது"

— ஒரு பேச்சாளர்.

பறையடிக்கும் மேளங்களுக்கு நெருப்புவைத்து அதைத்தொழிலே அழித்த உணர்ச்சியும் சத்தியாக்கிரகத்திலிருந்து வந்திருக்கக் கூடுமோ?

* * *

"யாழ்ப்பாணக் கச்சேரி வளவுக்குள் இராணுவவீரர் ஊஞ்சல்கட்டி ஊஞ்சல் ஆடி மகிழ்கிறார்கள்"

— கண்டது.

அவர்கள் கச்சேரிக்குள்ளேயல்ல சன்னி ஆடுகிறார்கள். வெளியே தமிழனின்னே ஊசலாடுகிறான்!

* * *

"சத்தியாக்கிரகிகள்மீது பொழிந்து வருணபகவானும் வஞ்சந் தீர்க்கிறனே?"

— செய்தி.

இல்லை! அறப்போர் அகிம்சையின் குளிர்மையிலே சிறிதாயினும் பகைச்சூடு எருதபடி மழை உதவி செய்கிறது.

* * *

"சத்தியாக்கிரகிகள்மீது விஷமிகளிடமிருந்து கல்லுகள் வந்து விழுகின்றன"

— செய்தி.

அதுவிஷமமல்ல, இராப்பகலாகத் தவஞ் செய்யும் சத்தியாக்கிரகிகள் நித்திரை கொள்ளாதவாறு பாதுகாக்கும் திருப்பணிபோலும்!

* * *

"சத்தியாக்கிரகிகள் பிரார்த்தனை செய்யும் அமைதி நேரத்திலே இராணுவப் பகுதியிலிருந்து "பைலா" ஆடும் சத்தம் கேட்கிறது"

— செய்தி.

அதுவும் அவர்களது ஒருவகை ஆராதனை முறையோ?

* * *

"யாழ்ப்பாணத்திலே ஆட்டிலே சிங்கள சிறி எழுதி விடுகிறார்களாம்"

— செய்தி.

"வீட்டில் மதவு விளிம்பிலே
மேய்ந்துவரும்
ஆட்டில் சிறிஎழுதும்
அன்பர்களே!-நாட்டினிலே
தாகந்தணிக்க தகுவழிகள்
காண்பதல்லால்
வேகம் பெருக்குதலோ வீண்"

என்கின்றார் ஒரு ஞானியார்.

* * *

"இரு கண்ணுமில்லாதவர் ஒருவர் தடவித் தடவிவந்து தமிழ் அன்னையை வாழ்த்திச் சத்தியாக்கிரகம் செய்தார்"

— செய்தி.

"கண்ணுடையார் என்பவர்
கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

எனும் குறளுக்கு இப்போதான் விளக்கம் தெரிகிறது.



சமுகத் தொண்டன்

மலர் 9] சித்திரை கூ (13-4-61) [இதழ் 8.

"நமனை யஞ்சோம்"

புத்தாண்டு பிலவ வருடம் இலங்கைக்கு மாத்திர மன்று; உலகம் முழுவதுக்குமே நல்ல தல்ல எனறு இதுவரை ஐந்து பத்திரிகைகளில் டிடித்த நூன வுண் டு. பஞ்சாங்கங் களும் அவ்விதமே கூறுகின் றனவாம். எண்ணூறு ஆண்டு கட்குப்பின் இவ்வாண்டுதான் புதுமையாக ஏதோ கோடிய கிரகங்கள் கூடுகின்றன என்றும் படித்தோம். ஈழத் தமிழகத்திலே இன்னலின்மேல் இன்னலவறி அன்னைமொழி அல்லற்பட்டு அரசியல் உரிமையுடன சரிச யல் உரிமைகூட இழந்து அதா வது கூப்பன் அரிசி கூட இனறி வாடும் ஒரு சூழ்நிலையிலே புத் தாண்டு வருகிறது மரண வீட்டிலே மழலைக் குழந்தை சிரிப்பதுபோல.

இதை எப்படி வரவேற்பது எப்படிப் புத்தாண்டு வாழ்த்துக் கூறுவது என்று சிந்தித்துச் சிந்தித்துத் தெளிவுகான முடி யாதிருந்தபோது காரிருளிலே கதிரொளி தோன்றுவதுபோல ஓர் எண்ணம் மின்னுகிறது. அது டழைய தமிழ் எண்ணந் தான்!

"தெய்வத்தா லாகா தெனினும்
முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்"

"ஊழையும் உப்பக்கம் காண்பர்
உலலவின்றி.
தாழா துஞற்று பவர்"

என்ற குறள்மணிகளின் கருத்து வேறும்கோள்கையன்று; இன்று வாழவில் அநுபவ உண்மையு மாய் அமைந்து வருகிறதன்றே? தூரக காட்சியின நமபிக்கை யுடன் முயன்றுவரும் இன்றைய அறப்போரிலும இந்த "முயற்சி" ஆறறி யமைத்த அற்புதங்கள் அநேகம்!

சைவர் கிறித்தவர் இசுலாமி யர் என்ற முச்சமயங்கொண்ட

தமிழர்கள் அறப்போர்க் களத்திலும் ஆலயங்களிலும் செய்து வரும் பிரார்த்தனைகள், இது வரை சாதித்தவை பல. அரசாங்கக் கட்சியில் உள்ளோர்—அநேக சிங்களப்பெரியார்கள்—மன்னர்ப் புத்தகுருபோன்ற மதிப்புக்குரிய குருமார்கள் இந்த அறப்போரை வாழ்த்தி அழுதத் தமிழ் மொழிக்கோர் அந்தஸ்தைக் கொடுக்கவேண்டுமென்று அறிக்கைவிட்டமையும், சாதிப் பிரிவு சமயப்பிரிவு கட்சிப்பிரிவு எனும் மும்மலங்களையும் கடந்து ஒருமைகூடிநிற்கும தமிழரின் நிலையும் காரிருளில் தோன்றும கதிர்க் கிரணங்களெனக் கொள்ளலாம்.

ஒருநாளில் நண்பகலில் பன்னிரண்டு மணிக்கும் மாலை ஆறு மணிக்கும் ஈழத்தமிழக மெங்கும் எழுப்பும் மணிஒலிக்கு மக்கள் என்னசெய்துகொண்டிருப்பினும் உடனே நிற்க நிலையிலேயே நின்றவித்து இறைவனை வணங்குங் காட்சியும், ஒருமைப்பாடும் ஊழையும் உப்பக்கம் காணுமென்பதுண்மையன்றோ? ஆகவே இறைவனுடன் சேர்ந்த இந்த முயற்சி கூலிதரும் என்பதால் கூறறு வன்தான் புத்தாண்டாக வந்தாலும் "நமனை யஞ்சோம்" "உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அசைவிலோம்" என்று முழங்கி முரசுகொட்டி "புத்தாண்டே வா" என்று வரவேற்போமாக! இந்த நன்றிப் பிரார்த்தனை நாளாக்க வேண்டுமென்றும ஒருகுரல் கேட்டோம். மிகநன்று. புதுத்தாண்டு தடசு நாளாகுக. அப்போது தமிழ்ப் புத்தாண்டு இன்பத் திருநாளாகும்.

○●○

ஆதரவு நல்குவோம்!

உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு என உணர்ச்சி கொண்டு உரிமைப் போரிலீடுபட்டுள்ள இலங்கைவாழ் முப்பது இலட்சம் தமிழ்ப்பேசும் பெருமக்களின் விடுதலை வேட்கையின்மத்தியில் கலைப்பணிபூண்டு அரசியற் கலப்பற்ற முறையில் இயங்கிவரும் நமது சமாசம் எத்தகைய பணியினை மேற்கொள்ள முடியும் என்பது குறித்து நாம் இங்குச் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம். மொழி இன்றேல் இனமில்லை, இனமின்றேல் அதற்குரிய பண்பாடுகளனைத்தும் அழிந்தேழிந்துவிடும். கலாச்சாரத்தைக் கட்டிக்காக்க முடியாது. நாளடைவில் சரித்திர ஏடுகளில் அதுபற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத்தான் நாம் காணமுடியும், இங்ஙனம்

யில் இனத்தின் தனித் தன்மை யும், அதன்மொழியும் காப்பாற் றுப்பட்டாற்றான் அந்த இனத் தின் கலாச்சாரப் பண்பாடுக ளனைத்தும் உயிருட்ன் திகழ முடியும் என்ற உண்மையை நாமுணர முடிகிறது.

இன்று நாடு தாயகத்தில் நடைபேற்றுவரும் அறப்போரும் இந்த உண்மையைத்தான் நமக் குப் போதக்கிறது. இலங்கை வாழ் தமிழ்பேசும் பெருங்குடி மக்களனைவரினதும் உயிரினு அனைத் தமிழ்மொழிக்கு ஆட் சிப் பீடத்தினர் சட்டரீதியான அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற அடிப் டைக் கோரிக்கை யினை முன்வைத்தே போராட் டம் நிழ்றது இத்தகைய போராட்டத்தை நியாய புத்தி படைத்த மனிதன் எவனுமே வரவேற்பான் என்பதில் ஐய மில்லை. அன்னைத்தமிழ் பேணப் பட்டாற்றான் தமிழினம் இந் நாட்டில் தலைநிமிர்ந்து வாழ முடியும் தமிழ்க்கலை, கலாச்சாரம் என்பன தனித தன்மையுடன் வளரமுடியும. இந்தஉண்மையை எவரும் மறுக்கமுடியாது. நமது சமாசத்தைப் பொறுதத வரை யிலும் இந்த மகத்தான உண் மையை நாம் மனசிற்கொண்டு இப்பிரச்சினையை நாக்கவேண் டியது மிகவும் அவசியமாகும். கன்னித் தமிழ்மொழிக்கு இந் நாட்டில் சட்டரீதியான இட மில்லை யென்றால் பின்னர் எப் படி அதன் கலாச்சார உணர்ச் சியை நாம் பேணமுடியும்? இதுவே இன்று நம்மனவ ரதும உள்ளங்களில் எழும் வினு வாகும்? எனவேதான் கலாச் சார உணர்ச்சியையே தனது இலட்சியமாகக்கொண்டு செய லாற்றிவரும் யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங் களின் சமாசம் தற்போது நடை பேற்றுவரும் அறப்போருக்குத் தன் ஆதரவைத் தெரிவிக்க முன் வந்துள்ள தென்பதை இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஒருசிலர் சொ வதைப்போன்று கலைவளர்ச்சியை மாத்திரம நாம நோக்கிக்கொண்டிருப் போ மானால் நாளடைவில் நமது மொழிமாத்திரமல்ல இனமுமே அழிந்தொழிந்து போய் விடும். பின்னர் கலைவளர்ச்சி பற்றிச் சிந்திக்கவே நமக்கிடமில்லாது போய்விடும்.

அண்மையில் கூடிய நமது சமாசச் செயற்குழு நீண்டநே மாக இதுபற்றி விவாதித்தபின் னர் மொழியுரிமைப் போராட்டத் திற்கு ஆதரவு தெரிவித்துத் தீர்மானங்களை நிறைவேற்றியது. இன்று நம் முன்னுள்ள பிரச்சினை இலங்கைவாழ் முப்பது இலட்சம் தமிழ்பேசும மக்களின் தேசி யப் பிரச்சினையாகும். இதில் கட்சி மத, இனபேத மெதுவுமே யில்லை. இங்கேயில் தமிழினத் தின் ஏகோபித்த இப்போராட் டத்தை நாம் ஆதரிகவேண் டியது நமது தலையாயகடமையாகும். இன்றேல் எதிர்காலச் சந்ததி நமமைத் தமிழினத்தின் துரோகி கள் எனத் தூற்றுமென்பதில்

ஐயமில்லை. எல்லாவேதான் நமது சமாசத்தின் முடிவுகளை நாம் பெருமையுடன் வரவேற்கின்றோம். நமது நிலையங்கள் பல போராட்டத்திற்குப் பரிபூரண ஆதரவு நல்கி வருகின்றன என்பதைத் தினமும் நமக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. நிலையங்களின் மொழிப்பற்றும் இன உணர்ச்சியும் வாழ்க! இந்த ஒன்றுபட்ட உணர்ச்சியின் மூலம், காந்தியடிகள் காட்டிய அன்பு வழியில, அறநெறியில் உரிமைபெற முனைவோமாக!

வாழ்க தமிழ்மொழி!

வாழ்க தமிழினம்!!

வரவேற்கிறோம்!

தற்போது நடைபெற்றுவரும் மொழியுரிமைப் போராட்டத்தில் தமிழ் எழுத்தாளர்களின் பங்கு என்ன என்பது குறித்து யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆராய்ந்துள்ளமை குறித்து இலங்கைவாழ் தமிழ் எழுத்தாளர்க ளனைவரும் பெருமையும், மகிழ்ச்சியுமடைய வேண்டியவர்களா யிருக்கின்றோம். ஒருசில எழுத்தாளர்களுக்கு வரவேற்பும், பாராட்டும் நடத்தி முடிப்பதுதான் எழுத்தாளர் சங்கங்களின் ஆலட்சியமாக ஈழத்தில் திகழ்கின்ற தென்ற கூற்றை யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இதன் மூலம் மாற்றியமைக்க முற்பட்டதே மகிழ்ச்சிக்குரிய செயலாகும். தமிழ்மொழியையே நம்பி வாழுகின்ற தமிழ் எழுத்தாளர்கள் தங்கள் மொழிக்கான சீவமரணப் போராட்டத்தில் எக்கொடுக்கப் பின்னிற்கின்றார்கள் என்ற வசை மொழியை மாற்றியமைக்க வேண்டிய மகத்தான கடமை நமக்குண்டு. இந்த உண்மையை உணர்ந்து செயலாற்ற முன்வந்த யாழ். த. எ. சங்க நிர்வாகிகளைப் பாராட்டுகின்றோம். மொழியுரிமைப் போராட்டத்திற்குப் பூரண ஆதரவு தெரிவித்துள்ளதுடன், அறபோர்க் கவிதைகள கொண்ட தொகுப்பு நூலொன்றை வெளியிடவும் மேறபடி சங்கம் ஏற்பாடு செயது வருவது மகிழ்ச்சிக்குரியது. இத்தகைய முயறசி வெற்றிபெற எழுத்தாளர்களனைவரும் ஆதரவு நல்க வேண்டுமெனக் கோருகின்றோம். பேரூமன்னர்களின் ஒன்றுபட்ட ஆதரவு போராட்டத்துக்குத் துணைபுரியுமாக!

— "ஆனந்தன்"

சனசமூக நிலையங்களுக்கு விண்ணப்பம்

ஐயன்மீர் !

புதுவருட சந்தா இன்றி ஒன்றும் செய்யமுடியாது இடர்ப் படுகின்றோம் என்பதை நாம் சொலலித்தான் நீங்கள் உணர்வீர்கள் என்பதில்லை. நல்ல கலை வளர்த்து நாட்டின் தொண்டு செய்து தமிழன்னை அறப்போரிலும் சலியாது சேவை செய்யும் நிலையங் கட்கு நாம் இதை வற்புறுத்த வேண்டாமெனினும் தொண்டனைக் கூட மாதந்தோறும் அச்சிடவும் முடியாமல் இடர்ப்படுகின்றோம் என்பதையும் சொல்லாமலிருக்க முடியவில்லை.

தயவு செய்து இவ்வாண்டுச் சந்தா ஐந்து ரூபாவை எமக் கனுப்பி சமாசப்பணியை ஊக்கப்படுத்துங்கள்.

மிக நன்றி.

சி. இராசரத்தினம்.
பொருளாளர்.
2-4-61.

எமது விலாசம் :

சி. இராசரத்தினம்
யாழ். ச. ச. நிலைய சமாசப்
பொருளாளர்
வேலணை.

அறிவிப்பு

சிறுபடங்கள், சஞ்சிகைகள், சுவர்ப்படங்கள் வேண்டும் நிலையங்கள் சனிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்கள் காலையில் நமது சமாசத்திலுள்ள அரசவாயில் முதலியார் **சி. தியாகராசா** அவர்களது மாணிப்பாய் "அயோத்தியா" மனையில் சென்று பெறுக.

'தவமணி' நவாலி
மாணிப்பாய்.

உ. நா. தேவகடாட்சம்
செயலாளர்.

காதலிக்காதே .....!

.....பு. வா. திருட்டினமூர்த்தி.....

கேட்டதுண்டு அவள்புகழை ஆனால்
கண்டதில்லை அந்நிலையைச் சொல்ல!
அறிந்ததுண்டு அவள் கொடுமை—ஆனால்
அடைந்ததில்லை அத்துயரம் தன்னை!

செல்வத்தைத தள்ளிய வளாமவள் ஆனால்
செம்மையைக் கொண்ட வளிலையாம்!
துன்பத்தைத் தந்திடு வளாமவள்—ஆனால்
இன்பத்தை அடைந்த வளில்லையாம!

எப்போதோ கண்டாளாம் என்னை....ஆசை
கொண்டாளாம்; மனம் மறந்தாளாம்!
அப்போதே நினைத்தாளாம் காதலிக்க பின்னர்
மறந்தாளாம் ஏனை அறியேனே;

கண்டுவிட்டாள் என்னை எப்படியோ;
வந்து விட்டாள் உரிமை கொண்டாடவே
கொண்டுவிட்டாள் காதல்யான் மறுத்தபோதும்;
சென்றுவிட்டாள் துயரம தந்திட்டே!

அக்காதலைப்பற்றி எப்படி உரைப்பேன்—அது
எக்காளம் போடுபவளின் கதையாச்சே!
எக்காலத்திலும் மறவேனே அவளின் நினைவை
நற்காலம் தரவே என காகலையை கேட்கிறேன்

பட்டதுபோதும் இனியோருமுறை வேண்டாமே!
சுட்டதுபோதும் நெஞ்சை உன் காதலால்
விட்டது போதும் இனியும் காதலிக்காதே
என்னருமைக்காதலியே! **வறுமையே**!

★

செய்திகள்

அனுதாபம்!

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் செயற்குழுக் கூட்டம் நிலைய உபதலைவர் திரு. நா. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றபோது நிலைய நிர்வாகிகளும், உறுப்பினர்களும் மொழியுரிமைப் போராட்டத்தில் இறங்கிக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது. மூத்தோர்த்தொழுதி முதலாவது உறுப்பினர் திரு. த. ஏகாம்பரம் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக இருநிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

விளையாட்டு மைதானம்!

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினர் பொதுவிளையாட்டு மைதான மொன்றை அமைக்கும் முயற்சியில் தீவிர கவனம் செலுத்தி திருஞானரனர் அரசினர் சுமார் 4500 ரூபாவரை இதற்கு நன்கொடை வழங்க முன் வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சமாச விழா!

நமது சமாசக் கலைவிழா பற்றி நமது சமாசத் தலைவர் அரசவாசல் முதலியார் திரு. சி. தியாகராசா அவர்கள் விடுத்துள்ள செய்தியொன்றில் தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாகச் சமாசக் கலைவிழா ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும், சுமுகமான சூழ் நிலை உருவானதும் கலைவிழா பற்றிச் செற்குழு கூடி முடிவு செய்யுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளுவர் திருநாள்!

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் 3 - 3 - 61ல் திரு. கோ. கந்தசாமி தலைமையில் திருவள்ளுவ நாயனார் நினைவு தினம் கொண்டாடப்பட்டது.

நிதியுதவி!

தற்போது நடை பெற்றுவரும் மொழியுரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்குமுகமாகத் தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினர் 125 ரூபாவைப் போராட்ட நிதிக்கு வழங்கியுள்ளனர்.

நமது சமாசம்!

நமது சமாசத்தின் செயற் குழுக் கூட்டம் 18 - 3 - 61 சனிக்கிழமை மாலை சமாசத் தலைவர் அரசவாசல் முதலியார் திரு. சி. தியாகராசா தலைமையில் நடைபெற்றபொழுது மொழியுரிமைப் போராட்டம் குறித்தும், சமாசவிழா பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. தற்போதைய நெருக்கடியான நிலைமை காரணமாகச் சமாசக் கலைவிழாவை ஒத்தி

தொடர்ச்சி 8-ம் பக்கம்

ஆண்டு மலரிலே ... .!

ஈழத்துச்சோமு 1960-ஆம் ஆண்டின் இலக்கிய வளர்ச்சியை எழுதுகிறார். பிரேம்ஜி, ஆத்மஜோதி முத்தையா, சுதந்திரன் ஆசிரியர்; சிவநாயகம், வித்துவான் நடராசா, எச். எம். மூசிதீன், தெளிவிய முத்துக் கருத்துக்களை அள்ளித் தெளித்திருக்கிறார்கள்.

கணேசலிங்கன், பத்மா, வரதர், மூதூர் இராசரத்தினம், நீலா இராமமூர்த்தி, செக்கன், டானியல் முதலிய கதாமணிகளர் சிறு கதைத் தேன்துளிகளை வார்த்துத் தெளித்திருக்கிறார்கள். கனகசெந்தி நாதன் நாவேந்தன் என்பவரின், விமரிசனங்கள் முதலியவர் குலசபாநாதன், பண்டிதர் இரத்தினம், இரகுநாதன், இராமலிங்கம், பகவதி ஐயரசமன், மகரம், அருள் செல்வநாயகம், சிற்பி, ஆதவன், தேவன், புதுமைலோலன், மூர்த்தி, புதுவைவிளி முதலிய பேனு மன்னர்களின் கட்டுரை மணிகள், பெண்ணுத்துரையின் சரிதிர நாடகம் மலரை இதழ்விரித்து நறுமணமாக்கி வாசக வண்டுகளை வட்டமிடப்பண்ணி யிருக்கின்றன! பரமகம்சதாசன், முருகையன், திமிலைத் துமிலன், யாழ்ப்பாணன், ஜெயம், இராசபாரதி, மகாகவி, கவிஞர் செல்லையா, நீலாவணன் எனும இனிகரும் கவிதைகளின சிறப்பை விரிக்கில் அதுவே ஒருகாவியமாகும்.

என் அதிகம் எழுதவேண்டும்? மிகவிரைவில் பணம் அனுப்பிப் பதிந்துகொண்ட நிலையங்கள் படித்துப் பார்க்கப் பேசுகின்றன. பார்த்து விட்டு ஈழநாட்டின் திருத்தலங்களை பலவற்றின மூவரைப் படங்களைப் பற்றியும் சங்க இலக்கியப் பாடல்களை அமுதமாகித்தந்த அழகைப் பற்றியும் இன்னும் பல அம்சங்களைப்பற்றியும் என மறைததீர்கள் எனறு எமமைக் குறைகூறப் பேசுகின்றன!

—ஆசிரியர்.

செய்திகள்

7-ம் பக்கத் தொடர்ச்சி

வைப்பதென முடிவு செய்யப் பட்டது.

20-2-61ல் சாத்வீக சத்தியாக் கிரகிகள் மீதும், மக்கள் பிரதி நிதிகள் மீதும் யாழ்ப்பாணத்தில் பொலீசார் நடத்திய தாக்குதல் குறித்து விசாரணை நடத்தமாறும், இரணுவத்தை வாபஸ் பெறு மாறும், பங்கீட்டரிசி விநியோ கத்தைத தாமதமின்றி அமுல் நத்துமாறும் அரசின்னைக் கோரும் தீர்மானங்கள் ஏகமன தாக நிறைவேறின.

:தொடர்கதை:

"அன்பு எங்கே?"

கச்சாயில் இரத்தினம்

அடுத்த இதழில் "அன்பு எங்கே?" என்ற தொடர்கதை எங்கே என்று கேட்கப்போகிறீர்கள். இச்சிறந்த தொடர்கதையை உடனே நூல்வடிவமாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபடியினால் அதன் ஆசிரியர் கச்சாயில் இரத்தினம் அவர்கள் வேண்டு கோட்படி இத்தொடர்கதை தொண்டனில் இனி வெளிவர முடியாம லிருக்கிறதென்ற துக்கசெய்தியைச் சொல்லும்போது ஒருமகிழ்ச்சியை யும் வெளியிட்டாற்போல் துக்கமும் மகிழ்வும் சமநிலையாகும்.

அதாவது தமிழகத்துச் சிறந்த எழுத்தாளர்டு சன்னை: நீலா. இராம மூர்த்தி யவர்கள் எழுதும் உயர்ந்த கருத்தும் உணர்ச்சியும் கொண்ட "கானல்நீர்" என்னும் நீண்ட சிறுகதை அதா வது சிறியதொடர்கதை அடுத்த இதழில் தொடர்கிறது என் பதையும் அறிவிக்கின்றோம். சென்ற பல இதழ்களில் தொடர்ந்து வந்து "அன்பு எங்கே?" என்று தேடி ஈற்றில் அது "கானல்நீராக" முடிந்துவிட்டது என்று கருதக்கூடாதென்பதையும், அந்த நல்ல தொடர் கதையை அதன் ஆசிரியர் உடனே நூலாக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கேற்பட்டதினால் நாமும் அவருக்குதவி செய்து அதன் வெறுமையை நிறைவாக்க இந்தக் "கானல்நீரை" நீலா.இராம மூர்த்தியவர்களிடம் பெறவிழைந்தபோது அவர்கள் மனமுவந்தளித் துதவினார்கள் என்பதையும் மறுபடியும் வாசகர்கட்கு நினைவூட்டு கிறோம்.

—ஆசிரியர்.

அத்தியாயம் 8.
கலடசித்தீர்மானம்

மூர்த்தியிடம் தனது முழுமன தையும் பறிகொடுத்துவிட்ட மாலா அவன் வேண்டுகோளை மறுக்க முடியாது சங்கடப்பட்டாள். அவள் படத்தில் நடிக்க மறுத்து விட்டால் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவன் அன்பையும் இழக்கவேண்டி வரும் என்பதை எண்ணிய அவள் "உங்களின் வேண்டுகோளை என்னால் மறுக்காமல் இருக்க முடியவில்லை. ஆகையால் இனி எடுக்கப்போகும் அந்த ஒரே படத்தில் மட்டும் நடிக்க ஒப்புக் கொள்ளுகிறேன் அதற்குப் பிறகு என்னைக கொன்றாலும் நான் நடிப்பதில்லை என்று நிர்மானித்து விட்டேன்" என்றாள் மாலா.

"ஆமாம் மாலா நானும்தான் இந்த ஒரு படத்தோடு நடிப்பதை நிறுத்திவிடப் போகிறேன்; திரை உலகில் நாம் முன்னேறுவது என்பது வெறும் பகற்கனவு" என்றான் மூர்த்தி.

தனது எண்ணத்தை ஆமோதித்த மூர்த்தியிடம் மாலாவுக்கு அளவுகடந்த அன்பு பெருக்கெடுத்தது. மாலா எதைச் சொன்னாலும் மூர்த்தி முதலில் மறுத்துக் கூறுவான்; அவள் முகத்தைச் சுளித்துக் கொள்வாள். உடனே அவன் அவளின்வசமாகிவிடுவான். இதனைப் பலமுறை பார்த்தவள் மாலா. அதனால் அவளுக்கு மகிழ்ச்சி கரைபுரளத் தொடங்கியது.

வருகிறீர்களா தாங்கள் சிறிது நேரம் கடற்கரைக்குச் சென்று உலாவிவிட்டு வரலாம் என்று கொஞ்சு மொழியில் கெஞ்சினாள் மாலா.

"மாலா, நான் இப்பொழுது அமராதியேட்டர் மனேச்சரைக் காண வேண்டும்."

"என் அவரை நாளைக்குக் கண்டாலென்ன?"

சரி மனேசரை நாளைக்குக் காணலாம். புறப்படு கடற்கரைக்கு உலாவப் போகலாம் என்றான். உடனே மாலா இதோ புறப்பட்டு விடுகிறேன் என்று நேரே தனது அறைக்குப்போய்த் தன்னை மிக அழகாக அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டு வந்தாள்.

அவள் அழகு மூர்த்தியின் மனதில் பலவிதமான கற்பனைகளை எழுப்பியது. "மாலா, உனக்கு உந்தப் புடைவை மிகவும் அழகாக இருக்கிறது" என்றான் மூர்த்தி.

எனைக் கேலி பண்ணினது போதும். எப்படி என்றாலும் நான் அந்த மேலாடைப்போல அழகாக இருக்க முடியுமா? என்றாள்.

"மாலா, எல்லாரும் அழகான வர்களாயி எல்லார் கண்களுக்கும தோற்ற மாட்டார்கள். ஒருத்தி ஒருவன் கண்ணுக்கு மிக அழகாகத தோற்றுவாள் ஆனால் அவளை இன்னொருவன் மிகக்குரூபி என்று கூறிப் பரிகாசம் செய்வான் மேகலாவை நீ அழகி என்று மதிப்பிடுகிறாய், ஆனால் எனக்கு நீயே அழகியாய்த் திகழ்கிறாய்" என்றான் மூர்த்தி.

மூர்த்தியின் மொழிகளைக் கேட்டமாலாவின் உள்ளம் துள்ளிக் குதித்தது.

"என் அத்தான் நீங்கள் என்னை உண்மையாகத்தானா அழகி என்கிறீர்கள்"

"அதில் உனக்கு என் இத்தனை சந்தேகம்!"

"அப்படியானால் நான் ஒரு பாக்கியவதி இனி எனக்கு இந்த உலகில் குறை ஒன்றுமேயில்லை"

"மாலா, அதோ அந்திப் பொழுது தாகி விட்டது. புறப்படு நேரமாகிறது.

"ஊம் இதோ நான் றெடி"

மூர்த்தியின் கார் கடற்கரையை நோக்கிப் பறந்தது. அவர்கள் கடற்கரையை அடைந்ததும் காரை ஒரு புற்றரையில் விட்டுவிட்டு இருவருமாக கடற்கரையில் வசதியான ஒரு மணல் மேட்டைத் தேடிச் சென்று அந்த மணல் மேட்டில் அமர்ந்து கொண்டார்கள். கடற்காற்று மிக ரம்மியமாக வீசி அவர்கள் உள்ளத்தில் பலவித உணர்ச்சிகளைக் கிளறியது.

கடலில் கண்ணுக்கு எட்டிய

தூரத்தில் சில கப்பல்கள் எறும்பு போல ஊர்ந்து மறையும் அந்தக் காட்சி அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தது.

ஆதவன் கடலின் அடியில் மறையும் அழகை அவர்கள் ரசித்து மெய்மறந்து திருந்தார்கள்.

உலகை மிளிரச் செய்த ஒளி சிறிது சிறிதாக மறைந்தது; இருள் சூழ்ந்தது.

அப்பொழுதுதான் காதலர்கள் இரவாகி விட்டதை உணர்ந்தனர்.

"மாலா உன்னோடு எவ்வளவு நேரம் பேசிக கொண்டிருந்தாலும் அலுப்புமில்லை; நேரமாவதும் தெரிவதில்லை. இரவாகிவிட்டது இனி நாம் இங்குதங்குவது பிசகு எழுந்திரு போகலாம்" என்றான் மூர்த்தி.

மாலாவுக்கு இன்னும் சிறிது நேரம் மூர்த்தியோடு அந்த வெண மணற் கும்பலிலிருந்து கொண்டு தன் அழகை வர்ணிப்பதைக் கேட்க இன்பமாக இருந்தது. ஆனால் அவள் எண்ணத்திற்குத் தடையாகப் பாழாய்ப்போன இருள் சூழ்ந்து விட்டதே என அவள் மனசு தவித்தது.

இதோ நான் புறப்பட்டுவிட்டேன் என்றுகூறி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். அந்த மூச்சோடு அவள் மார்பும் விம்மின. கன்னங்கள் குங்குமம் போலச் சிவந்தன.

மூர்த்தியின் கார் மாலாவின் பங்களாவை நோக்கி விரைந்து சென்றது. எதிரில் வந்துகொண்டிருந்த மேகலாவின் புதிய "பியூக்" கார் அவர்களைத் தாண்டிச் சென்றது. அதனைக் கவனித்த மாலாவின் உள்ளம் உள்ளூரப் பலபல எண்ணங்களால் குமுறத் தொடங்கியது. இந்த நேரத்தில் மேகலா எங்கு சென்றாள் என்பது அவள் எண்ணத்தில் எழுந்த முதல் வினா.

ஒருபெண் நன்முக வாழ்வதை இன்னொருபெண் கண்டு சந்தோஷம் எய்துவது மிகக்குறைவு என்பதை மாலா காட்டிவிட்டாள்.

"மாலா! என்ன நீ மீண்டும் எண்ணங்களை அலைபோடத் தொடங்கிவிட்டாயா? என திடீரென்று உனது முகம் வாடி வதங்கவேண்டும்" என்று கேட்டவாறே அவள் மாம்பழக் கன்னத்தில் தன்து கரத்தினாலே செல்லமாகத் தட்டினான் மூர்த்தி.

"அத்தான் நான் உங்கள் அன்பைப்பெற இந்த உலகில் எத்தனையோ முடமுச்சுக்கட்டைகள் இடையில் குறுக்கிடுகின்றன. இவைகளை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் களைந்து தெறிந்த பின்தான் என் உள்ளம் நிம்மதியடையும்" என்றாள். அவள் பேச்சில் அகங்காரமும் பழிவாங்கும் குரூரமும் பிரதிபலித்தன.

"மாலா மனிதன் வாழப்பிறந்தவன் அவனுக்கு வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறிமாறித் தான் வரும். நாம் இந்த உலகத்தின் பற்றை மறந்து பகவானிடத்தில் அன்பு கொள்ளவேண்டும் அவரின் பாதசேவையே எமக்கு

இன்பம்என மனத்திடம் கொள்ள வேண்டும்"

"நல்ல கதை சொன்னீர்கள் இந்த உலகத்தில் இன்பம் எங்கே என்று தவிக்கும் எமக்கு இந்தக் காதல்வாழ்வுதான் அதைக் காட்டித் தந்தது. அந்த உண்மையைக் கண்ணரைக் கண்ட பின்புமா உலகத்தை வெறுக்க வேண்டும்"

அந்த நேரத்தில் அவள் தோழி மல்லிகா அங்குவந்தாள் மூர்த்தி அந்த இடத்தை விட்டகன்றான்.

தொடர்ச்சி நூலுருவில் காண்க.

திருக்குறளறப்போர்

துன்பம் சகித்துத் துயர்மறந்து போராடும்
அன்புத் தமிழர்க் கறம்வெல்லும்—என்பதுமெய்
"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலகின்றித்
தாழா துஞற்று பவர்"

அன்னை மொழிகாக்கும் அன்புநெறி கண்டரசு
மன்னும் மனம்மாறி மாண்புறுக!—உன்னுகவே
"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்"

குண்டூரந் தடிதுவக்கின் கூர்முனைக்கும் அன்புமுகம்
கொண்ட புதுமைதமிழ்க் கொள்கையென்று—கண்டோமே
"இன்னுசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

நீயரசே! நின்று நிலைக்கில் அமுதனைய
தாயை இழந்த தமிழருக்குப்—போயருள்செய்!
"அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

காதல் செய்வீர்!

இளவரசி

கந்தை யுடுக்க வழியற்றுக்
கையை யேந்திக் கதறியழும்
மந்தை போன்று வீதிகளில்
மண்டிக் கிடக்கும் மதலைகளை
விந்தை யுலகப் பெரியோரே !
விரும்பி யழைத்து விழிநீரை
சிந்தை குளிரத் துடைத்தவர்கள்
சிரித்து மகிழக் காதல்செய்வீர் !

அழைக்கும் போதே அடிமையைப்போல்
அருகிலோடி வந்து நின்று;
குழைந்து கூறக் குழவியைப்போற்
குதித்து வேலை செய்கின்றுன்.
சுகத்துப் போனேன் எனக்கூறி
காலத்தை வீணுய் கடத்தாமல்
வளர்ந்து வீட்டின் பணிசெய்யும்
வறுமைப் பையனைக் காதல்செய்வீர் !

செல்வ மிதந்து சிறப்போடு
செருக்காய் வாழும் செல்வர்களே !
கல்லை யோத்த உம்உள்ளம்
கசிந்தே அன்பு நீர்வழிந்து
கல்விப் பசுமை யில்லாமல்
கருகிப் போகு மவனறிவு
பல்கிப் பெருகிப் பலனிய
பணத்தை யீந்து காதல்செய்வீர் !

பாச மாகப் பணமீந்து
படிக்க அனுப்பும் பெற்றோரின்
நேச இதயம் நோகாமல்
நேர்மை யாக நடந்துமது
தேச முய்ய பிள்ளைகளே!
தேடக் கிடையாக் கல்விதனை
நாச மடைந்து போகாமல்
நாளு மதனைக் காதல்செய்வீர்!

கலைகள் வளர்ந்த தமிழ்நாடு
கவலை யடைந்து வருந்துவதேன்?
மலையை நிகர்த்த அதன்சீலம்
மாசு பட்டதன் காரணமென்?
கலையைப் பார்த்து விலைபேசி
காசைக் காதல் செய்யாமல்
தலைக விழ்ந்த தமிழ்நாட்டை
தாங்கிக் கலையைக் காதல்செய்வீர்!

ஓடிச் செல்லும் வெள்ளத்தில்
ஒருதுளி போன்ற எம்வாழ்வில்
தேடித் திரிந்து குப்பைகளை
சேர்த்துக் காலம் போக்க மல்
வாடி யழிந்து சாகாமல்
வல்ல ஈசன் பதம்பணிந்து
பாடித் துதித்து நித்தியனும்
பரமனை வாழ்த்திக் காதல்செய்வீர்!

இப்பத்திரிகை யாழ்ப்பாணப் பகுதிச் சனசமூகநிலைய சமாசத்துக்காக அதன் நிர்வாக ஆசிரியர் சுண்டிக்குளி க. பே. முத்தையா அவர்களால் சித்திரை மாதம் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டது.